25th July 1962]

* 618 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ம் வருடத்தில் பருவமழை தவறிய பகுதிகளுக்கு நிலத்தில் அயன்வரி ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

(இ) எத்தனை மாவட்டங்களில் இப்படித் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH: (அ) Yes Sir.

(இ) Only in a portion of Ramanathapuram district.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ராமநாதபுரத்தையொட்டி இருக்கக்கூடிய புதுக்கோட்டை பகுதிக்கு இந்தச் சலுகை கொடுக்காததின் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா: புதுக்கோட்டைப் பகுதியில், ஒரு பகுதியில் சென்ற ஆண்டு எந்தவிதமான விளைவும் இல்லாதது எனக்கு நேரடியாகத் தெரிந்திருக்கிறது. இருந்தாலும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் விவரமான அறிக்கைகள் அனுப்பவில்லை. தொடர்ந்து பரிசிலனை செய்து என்ன நிவாரணம் கொடுக்க வேண்டுமோ அதை அரசாங்கம் கொடுக்க முயற்சி எடுக்கும்.

திரு. சா. கணேசன்: ராமநாதபுரம் ஜில்லாவில், முழுவதும் சாவியாகப் போய்விட்டது என்று சொல்லவில்லை. சில குறிப்பிட்ட பகுதிகளில் ஒரு மணி கூட விளையாமல் போன இடங்கள் பல இருக்கின்றன. அவற்றிற்காவது, வரி வஜா செய்தும், கடன் வசூலை ஒத்திவைத்தும் விவசாயிகளின் சிரமத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் தக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ? இல்லாவிட்டால், இனியாவது அந்த முயற்சியை எடுத்துக் கொள்ளுமா ?

கனம் திரு. வெ. ராமையா: இந்த முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. எனக்கு சில மாதங்களுக்கு முன்பு வந்த அறிக்கை இங்கு குறிப்பிட்ட பதிலுக்குத் தகுந்த முறையில் இருந்தது, புஞ்சை தான்ய மகசூல் கிடைத்தது என்று. அந்த அறிக்கையைப் பார்த்த பிறகு எந்தவிதமான முடிவு எடுக்க வேண்டுமென்றாலும் கலெக்டர் அந்தப் பகுதியை நேரடியாகச் சென்று பார்த்து ஒரு அறிக்கை அனுப்பவேண்டும். அதற்குப் பிறகுதான் இறுதியான முடிவு எடுக்க வேண்டுமென்று நான் முடிவு செய்திருக்கிறேன். அந்த அறிக்கை வந்த பிறகு எங்கெங்கு பாதிக்கப்பட்டிருக்கிறதோ அப் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசாங்கம் முன்வருமென்று இச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஸார், இவ்விதமான வரியைக் கொடுக்க விவசாயிகள் பல இடங்களில் கஷ்டப்படுகிறார்கள்,

[25th July 1962

அதோடு அபராத வட்டியும் கேட்கப்படுகிறது. இது மிகவும் கஷ்டமாக இருப்பதால் இந்த அபராத வட்டியையாவது போடாமல் இருப்பதற்குச் சர்க்கார் உத்தரவிடுமா?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அந்தப் பகுதி நன்ருகத் தெரியாது என்று நினைக்கிறேன். இருந்தாலும், அரசாங்கம் அந்தப் பகுதியிலுள்ள கஷ்டங்களை நன்ருக உணர்ந்திருக்கிறது. அதன் காரணத்தினுல் மழை இல்லாத காலங்களில் எல்லாம் அவ்வப்போது அரசாங்கம் கவனித்து அந்த இடங்களுக்கெல்லாம் தாராளமாக நிலவரி வஜா, கடன் வசூல் ஒத்தி வைப்பு முதலிய சலுகைகளைக் கொடுத்துக் கொண்டு வருகின்றது. கிழக்கு ராமநுதபுரம் பகுதிகளில் கடன் வசூல் ஒத்தி வைப்புச் சலுகை கொடுக்கின்ற விஷயத்தில் ஒரு வருஷம் இரண்டு வருஷம் அல்ல, ஏறத்தாழ பதினைந்து வருஷங்கள் வரை ஒத்திவைக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. சில வருஷங்களில் அந்த இடங்களில் மழை இருந்தாலும்கூட அங்கேயிருக்கக்கூடிய பட்டாதார்கள், முக்கியஸ்தர்கள் அரசாங்கத்தினிடம் வந்து தொடர்ந்து ஒத்திவைப்பு வேண்டும் என்று கேட்டுக்கொள்கிருர்கள். அதன்படி அரசாங்கமும் சம்மதிக்கின்றது. ஆனுல் வேளாண்மை சரியாக இருக்கின்ற நேரத்தில் கடன் வசூலைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் கருதுகின்றது. இதன் காரணமாக யாராவது பாதிக்கப்பட்டவர்கள் இருந்தால் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கச் சர்க்கார் எப்போதும் தயாராக இருக்கும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, mostly remissions are granted only during the failure of monsoon. Is there any proposal under the consideration of the Government to grant remission when there is devastation of crops. On what basis are these remissions granted.

THE HON. SRI V. RAMAIAH: Remissions are granted by Government not only when there is failure of monsoon but also when there is pest attack and the crops are completely damaged. I remember a case in Usilampatti area in Tirumangalam taluk. I have made a statement the other day, where groundnut crop was badly affected due to catterpillar attack and the Government have given remission. If there is similar damage caused by pest, the Government will certainly consider it and do the needful.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: கிழக்கு ராமநுதபுரம் பகுதியில் கலெக்டர் அவர்கள் நேரில் சென்று பார்த்து அறிக்கை கொடுக்க வேண்டும் என்ற உத்தரவை அரசாங்கம் போட்டுவிட்டதா? அப்படிப் போடப்படவில்லையென்ருல் சீக்கிரமாகப் போடப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா: நான் முன்பு சொன்ன பதிலில் சந்தேகம் இருப்பதற்கு வழியில்லை என்று நினைக்கிறேன். கலெக்டர் போய் பார்த்து அறிக்கை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிருேம்.

25th July 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்களை புதுக்கோட்டை பகுதிக்கு அழைத்துப் போக வேண்டுமென்று விரும்புகிறேன். புதுக்கோட்டைப் பகுதியில் விவசாயம் மோசமாக இருக்கின்றது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருந்தும், இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் பேசியதாகச் செய்தி வந்திருக்கும், இந்தச் சலுகையைக் கொடுப்பதற்குக் காலதாமதம் ஆவானேன்? உடனடியாகவே ரெமிஷன், கடன் வசூல் ஒத்திவைப்பு முதலிய சலுகைகளைக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமையா: இதுபோன்று எங்கெல்லாம் மழை பெய்யாத பகுதிகள் எல்லாம் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளை எல்லாம் நேரிலேயே போய் பார்க்கவேண்டும் என்பது தான் என் விருப்பம். இந்தக் கஷ்டங்களை எல்லாம் நன்றாக உணர்ந்தவன் நான். கனம் கலியாணசுந்தரம் அவர்கள் இந்தமாதிரியான கஷ்டங்களையெல்லாம் நன்றாக உணர்ந்திருக்க முடியாது. எந்தப் பகுதிகளில் எல்லாம் இம்மாதிரியான தொந்தரவுகள், கஷ்டங்கள் ஏற்படுகின்றனவோ அந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு எல்லாம் நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று தான் அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது. அதிலும் இதைப்பற்றி மேல் அதிகாரிகளே பார்த்து அறிக்கை கொடுக்க வேண்டும், அப்போது தான் பல சிக்கல்கள் இல்லாது இருக்கும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. கிராம அதிகாரிகளிடத்தில் மட்டும் நிலைமையைப் பற்றி ரிப்போர்ட் செய்யச் சொன்னால் அவர்கள் ஒருவேளை பொறுப்பை தட்டிக் கழிக்க பார்த்தால், அதன் காரணமாக விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே மேல் அதிகாரிகளே இதைப் பற்றி அறிக்கை கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அந்த முறையில் புதுக்கோட்டை பகுதியிலும் ஜில்லா அதிகாரியே நேரில் போய் பார்த்து அறிக்கை கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கேட்டிருக்கிறது. புதுக்கோட்டையில் இருக்கின்ற நிலைமையே வேறு. கனம் கலியாணசுந்தரம் அவர்கள் புதுக்கோட்டை பகுதியில் எங்கு போய் பார்த்தார்கள் என்று தெரியவில்லை. அங்கு என்னென்ன நிலைமை இருக்கின்றது என்பது எனக்கு நேரடியாக நன்றாகத் தெரியும். ஆகவே, அங்கு என்னென்ன கஷ்டங்கள் இருந்தாலும் சரி அவற்றுக்கு நிவாரணம் அளிக்க அரசாங்கம் தயாராக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, இம்மாதிரி ராமநாதபுரம் ஜில்லாவில் இருப்பது போல் பல இடங்களிலும் மழை யில்லாததின் காரணமாகவும், வெள்ளப் பெருக்கின் காரணமாகவும் பயிர்களின் நிலைமை மிகவும் மோசமாய் இருக்கின்ற காரணத்தால், நம்முடைய அரசாங்கம் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை கொண்டு வருவதற்கு வழிவகை செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா: இது ஒரு முக்கியமான பிரச்னை, முக்கியமான கொள்கையும் கூட. இதற்கு இந்த உப-கேள்வியில்

பதில் சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் அக்கறை இருக்கின்றது. ஆகவே இதை வேறு பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினிடம் வற்புறுத்தலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், கலெக்டர் அவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டு ரிப்போர்ட் அனுப்புகிற வரையிலும்,— கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் வைகை பாசனப் பகுதியில் மட்டும் ஓரளவுக்கு விளைந்திருக்கிறது. மற்ற இடங்களில் விளைய வில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்—ஆகவே கலெக்டர் அவர்களின் ரிப்போர்ட் வருகிற வரையிலும், இந்த வரிவசூல், ஜப்தி முதலியவைகள் நடந்து கொண்டிருப்பதை நிறுத்தி வைப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : என்னிடம் இருக்கும் தகவலின் படி, அப்படி இடைக்கால உத்தரவு ஒன்றும் போட வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. கூடிய விரைவில் அறிக்கை வந்துவிடும். அதன்மீது நல்ல முடிவு எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தை இந்த ராஜ்யத்தில் கொண்டு வருவதற்கு இந்தச் சர்க்காரிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கின்றதா, அப்படித் திட்டம் ஏதாவது இருந்தால் அதை எப்போது கொண்டுவருவார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் மட்டும் கொண்டுவந்துவிட்டால் போதாது. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், இருக்கின்ற நீர்ப்பாசனத் திட்டங்களின் அடிப்படையில் பயிர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும் என்று அரசாங்கம் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகின்றது. மேலும் நமக்கு இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதிகள் இன்னும் மிக சொற்பமாகவே இருக்கிறது. வறண்ட பிரதேசமாக இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் நேரடியாகக் கவனம் செலுத்தி குழாய், கிணறுகள் மூலமாக நீர்ப்பாசனம் கிடைக்க வேண்டும் என்றும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முக்கியமாக கவனம் செலுத்தி வருகிறது. கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் போன்ற அம்சங்களிலும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இதில் இறுதியான ஒரு முடிவுக்கு வரவேண்டிய ஒரு சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Re-employment of retired persons

* 619 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of retired people who are still retained in service;

(*b*) the departments in which they are retained; and